

# 21 செப்டம்பர் 2023 நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஏ.பி.ஜே. அப்துல்கலாம் என்று பெயரிடப்பட்ட புதிய கடல் டார்டிகிரேட் இனம்.  | செய்தி:<br>முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாமின் பெயரில் புதிய கடல் டார்டிகிரேட் இனம்.<br>• கொச்சியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (CUSAT) ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ள புதிய கடல் டார்டிகிரேட் இனத்திற்கு மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரும் விஞ்ஞானியுமான ஏபிஜே அப்துல் கலாமின் பெயரை வைத்துள்ளனர். .<br>முக்கிய குறிப்புகள்:<br>• டார்டிகிரேடுகள் மிகவும் சிறிய விலங்குகள் ஆகும் அவற்றின் அளவு மைக்ரோமீட்டர்களில் அளவிடப்படுகிறது.<br>• அவைகள் நுண்ணிய அளவாய் இருப்பின்னும் மிகவும் கடினத்தன்மை உடையவை.<br>• அவைகள் அசாதாரணமான தாங்குதன்மை மற்றும் உயிர்வாழும் உள்ளுணர்வுக்கு பெயர் பெற்றவைகள்.<br>• இவைகளை நுண்ணோக்கிகளை மூலம் ஆய்வு செய்யப்படுகின்றன.இந்த நீர்வாழ் விலங்குகள் "நீர் கரடிகள்" என்ற புனைப் பெயரால் அழைக்கப்படுகின்றன. |
| தமிழ்நாடு சிறுதானிய திட்டம்  | செய்தி:இரண்டு ஆண்டுகளாகியும் பெரம்பலூரில் தமிழ்நாடு சிறுதானியம் திட்டம் இன்னும் தொடங்கவில்லை.<br>• தமிழகத்தின் முதல் வேளாண் பட்ஜெட்டில் மாநிலத்தில் சிறுதானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான சிறுதானிய இயக்கத்தை அறிமுகப்படுத்தி இரண்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.<br>• இருப்பினும் இந்த திட்டத்தின் 'சிறுதானிய மண்டலங்களின்' கீழ் உள்ள மாவட்டங்களின் பட்டியலில் இருக்கும் பெரம்பலூர் மாவட்டத்தில் வசிக்கும் |

| | |
|---|---|
| | விவசாயிகள் வேளாண்மை - உழவர் நலத் துறை இன்றளவும் குறைந்து வரும் நெல் சாகுபடி, மானியம் மற்றும் ஆதரவு விலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது போன்ற உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறுகிறார்கள்.<br><br>முக்கிய குறிப்புகள்<br>• தமிழகத்தில் சிறுதானிய சாகுபடி மற்றும் நுகர்வுக்கு ஊக்கமளிக்க 2014-15 ஆம் ஆண்டில் தமிழக அரசு தமிழ்நாடு சிறுதானிய திட்டத்தை துவங்கியது .<br>• சிறுதானியம் என்பது அதிக ஊட்டச்சத்து மற்றும் வறட்சியைத் தாங்கும் தானியங்களின் வகை ஆகும் .இது தமிழ்நாட்டின் வறண்ட மற்றும் மித வறட்சியான பகுதிகளில் சாகுபடிக்கு ஏற்றதாக அமைகிறது.<br><br>இந்த திட்டம் பின்வரும் நோக்கங்களை அடைவதை குறிக்கோளாக கொண்டுள்ளது:<br>1. தமிழகத்தில் சிறுதானிய சாகுபடி பரப்பளவை ஐந்தாண்டுகளில் 50% அதிகரிக்க வேண்டும்.<br>2. ஐந்தாண்டுகளில் தமிழகத்தில் சிறுதானிய உற்பத்தியை 100% அதிகரிக்க வேண்டும்.<br>3. தமிழக மக்களிடையே சிறுதானிய நுகர்வை ஊக்குவித்தல், அவற்றின் ஊட்டச்சத்து நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ,புதிய மற்றும் புத்தாக்க சிறுதானிய சார்ந்த பொருட்களை உருவாக்குதல். |
| தமிழகத்தில் அமைந்துள்ள பழங்குடியினர் பள்ளிகளில் ரேஷன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது . | செய்தி:<br>• தமிழகத்தில் பழங்குடியினர் பள்ளியில் ரேஷன் பொருட்கள் தீர்ந்து, அங்கு படிக்கும் குழந்தைகள் காலை உணவை தவற விடுகின்றனர்.<br>• அஞ்செட்டி அருகே மடக்கல் ஊராட்சியில் உள்ள பழங்குடியின கிராமமான அருள்நத்தம் என்ற ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் உள்ள சமையலாளர் மாணவர்களுக்கு வைத்திருக்கும் ரேஷன் பொருட்களை தீர்த்துவிட்டதால் 32 |

| | |
|---|---|
| | மாணவர்கள் காலை உணவு உண்ணாமல் பட்டினி கிடந்தனர். .<br><br>முக்கிய குறிப்புகள்<br>• தமிழ்நாடு பழங்குடியினர் காலை உணவுத் திட்டம் என்பது அரசு நிதியுதவியுடன் அரசுப் பள்ளிகளில்படிக்கும் பழங்குடியின குழந்தைகளுக்கு இலவச காலை உணவு வழங்கும் திட்டமாகும்.<br>• இந்தத் திட்டம் 2022ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது மற்றும் தற்போது மாநிலம் முழுவதும் 1,545 பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது.<br>• பழங்குடியின குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தவும், பள்ளிக்கு தவறாமல் செல்ல அவர்களை ஊக்குவிக்கவும் இத்திட்டம் நோக்கமாக உள்ளது. காலை உணவு, உள்ளூரில் கிடைக்கும் பொருட்களால் தயாரிக்கப்பட்டு, குழந்தைகளுக்கு சத்தான மற்றும் சீரான உணவை வழங்குகிறது. |
| போடிநாயக்கனூர்<br><br> | செய்தி:<br><br>போடிநாயக்கனூர் ரயில்வே மேம்பாலம் ஓராண்டில் கட்டி முடிக்கப்படும்.<br>• போடிநாயக்கனூரில் வரவுள்ள ரயில்வே மேம்பாலம்(Railway over Bridge (ROB))ஓராண்டுக்குள் முடிக்கப்படும் என மாநில நெடுஞ்சாலைத்துறை அதிகாரி தெரிவித்தார்.<br>• 45 கோடி ரூபாய் செலவில் மத்திய அரசின் சேது பாரதம் திட்டத்தின் கீழ் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இதன் கட்டுமான பணி தொடங்கியது.<br><br>முக்கிய குறிப்புகள்<br>• போடிநாயக்கனூரில் 851 மீட்டர் நீளம் உள்ள ரயில்வே மேம்பாலம் கட்டுமான பணியின் முக்கிய நோக்கம் ரயில்வே கடவு பாதையின் பயன்பாட்டை அகற்றுவதாகும். |

| | |
|---|---|
| | • தற்போது தூண்கள் கட்டும் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் ஓராண்டில் பாலம் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.<br><br>• இந்த பாலம் மதுரை முதல் கொச்சி வரை செல்லும் தேசியநெடுஞ்சாலையில் (NH-49) உள்ள போடிநாயக்கனூர் அண்ணாமலை தேநீர் கடை மற்றும் மசாலா வாரியம் இடையே கட்டப்பட்டு வருகிறது. |
| மதுரை மாநகராட்சி தெரு நாய்களுக்கு தடுப்பூசி போடுகிறது | செய்தி: ரேபிஸ் தினத்தை முன்னிட்டு மதுரை மாநகராட்சி தெருநாய்களுக்கு தடுப்பூசி போடுகிறது.<br><br>• நகரில் நடைபெற்று வரும் சிறப்பு தடுப்பூசி முகாமில் மாநகராட்சி சார்பில் நூற்றுக்கும் மேற்பட்ட தெருநாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது.<br><br>• 100 வார்டுகளிலும் முகாம்கள் நடத்தி தெருநாய்களுக்கு தடுப்பூசி போடுவதற்காக தெருநாய் வாகனம் மற்றும் நடமாடும் பிரிவு வாகனம்(mobile unit) ஆகியவற்றை மாநகராட்சி நியமித்துள்ளது.<br><br>முக்கிய குறிப்புகள்<br>• உலக ரேபிஸ் தினத்தை முன்னிட்டு மதுரை மாநகராட்சியில் செப்டம்பர் 18 முதல் செப்டம்பர் 28 ஆம் நாள் வரை 10 நாள் பிரச்சாரம் நடத்தப்பட்டு வருகின்றது.<br><br>• விலங்குகள் மற்றும் மனிதர்களில் ரேபிஸ் ஏற்படுவதால் ஏற்படும் விளைவுகள் மற்றும் அதை எவ்வாறு தடுப்பது என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 28 அன்று உலக ரேபிஸ் தினம் (WRD) அனுசரிக்கப்படுகிறது. |
| சேது பாரதம் திட்டம் | முக்கிய குறிப்புகள்<br>• சேது பாரதம் திட்டம் 2016 இல் சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட நாட்டின் முன்னெடுப்பாகும். |

| | |
|---|---|
| SETU BHARATAM<br>Ministry of Road Transport & Highways<br>Image Source: MyGov | • தேசிய நெடுஞ்சாலைகளில் பாலங்களை அமைப்பதன் மூலம் ரயில்வே பாதைகளைக் கடக்கும் இடங்களை அகற்றுவதே இதன் நோக்கம்.<br>• இந்தத் திட்டத்தின் கீழ் 208 புதிய சாலை மேம்பாலங்கள் (Road Over Bridge(ROB))மற்றும் 1,500 பாலங்கள் ரூபாய் 50,000 கோடி செலவில் கட்டப்படும் அல்லது மேம்படுத்தப்படும்.<br>• தமிழகத்தில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 800 கோடி செலவில் 9 சாலை மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.<br>• திருவள்ளூர், காஞ்சிபுரம், மதுரை மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள ரயில்வே கடவுப்பாதைகளில் இந்த சாலை மேம்பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. |

பதிப்புரிமை © ***Adda247***
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் *Adda247* இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுப்பு அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.